இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம்

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்ட பயிர்ச் செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

# வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம் (LSCL)

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

tkn-08-24-uns-053716-23x5-kkp-mr

# கரும்புச்சாறு (Sugar Cane Molasses) வழங்கலுக்கான சர்வதேச போட்டிரீதியான விலைமனு

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்திற்கு கரும்புச்சாறு வழங்கலுக்காக ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம் (LSCL) சார்பில் இலங்கை சனநாயக குடியரசின் அரசாங்கத்தின் கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்ட பயிர்ச் செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழு (MPC) தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

01. கீழ் குறிப்பிடப்பட்ட வங்கிக் கணக்கிற்கு பணம் அனுப்புதல் மூலம் 45,000.00 இலங்கை ரூபா அல்லது 225.00 அமெரிக்க டொலர்களை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்தி, 2021 ஒக்டோபர் 04 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்பர்ன் ஒழுங்கை, கொழும்பு 04, இலங்கை என்ற முகவரியில் இருந்து எழுத்துமூலம் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்களால் கொள்வனவு செய்ய முடியும். அதேபோன்று லங்கா சீனி நிறுவனத்தின் இணையதளத்தில் இருந்தும் **(www.Lankasugar.lk)** அல்லது பெருந்தோட்ட அமைச்சு இணையதளத்தில் இருந்தும் **(www.mfa.gov.lk)** விலைமனு ஆவணங்களை தரவிறக்கம் செய்ய முடியும் என்பதோடு மீளளிக்கப்படாத வைப்பின் வைப்பு ரசீது அல்லது வங்கி வரைவை விலைமனுவுடன் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்.

02. விலைமனு ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத வைப்பு ரசீதை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாத விலைமனு நிராகரிக்கப்படும்.

| | |
|---|---|
| **விபரம்** | இ. ரூபா வங்கிக் கணக்கு |
| **வங்கியின் பெயர்** | இலங்கை வங்கி |
| **கிளை** | மிலகிரிய |
| **கணக்கின் பெயர்** | வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம் |
| **கணக்கு இலக்கம்** | 73927950 |
| **Swift குறியீடு** | BCAYLKLX |

03. விலைமனுக்களை 2021 ஒக்டோபர் 05 ஆம் திகதி இலங்கையின் நிலையான நேரம் 14.00 மணிக்கு தாமதிக்காது **தலைவர், அமைச்சு பெறுகைக்குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்பர்ன் ஒழுங்கை, கொழும்பு 04, இலங்கை** என்ற முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் கைகளால் கொண்டுவந்து சேர்த்தல் அல்லது விரைதூதர் ஊடாக அனுப்புவதற்கு வகை செய்ய வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “கரும்புச்சாறு வழங்கலுக்கான கேள்விமனு” என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். **தாமதிக்கு விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.**

**04. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் நேரத்தில் 2 கி.கி. கரும்புச்சாறு மாதிரியை சமர்ப்பித்தல் வேண்டும்.**

05. இந்தப் பெறுகைக்கு 1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் ஏற்பாடுகள் பொருந்தும்.

06. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன – கொள்வனவு முகாமையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ.பே: +94 11 2505558, கைபேசி: +94 112581629, தொலைநகல்: +94 11 2500674, மின்னஞ்சல்: chandana@lscl.lk)

**தலைவர் - அமைச்சு பெறுகைக் குழு**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல. 27, மெல்பர்ன் ஒழுங்கை,**
**கொழும்பு 04,**
**இலங்கை.**